Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.84/2018

**Depositions of PW- 4**

| | | | |
|---|---|---|---|
| Name | **திருமதி.சின்னத்தாய்** | Occupation | வனச்சரக அலுவலர் EDC |
| Husband name | முத்தையா | Calling | |
| Village | செண்பகத்தோப்பு | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of March 2026.

24.03.2026

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் வனச்சரக அலுவலகத்தில் EDC ஆக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் பெட்டிக்கடை வைத்து தொழில் செய்து வந்தேன். ஆஜர் எதிரிகளில் 2ம் எதிரி ஈசாக்கை மட்டும் எனக்கு தெரியும். 1ம் எதிரி முத்துப்பாண்டியை நான் பார்த்ததில்லை. அசா.1 ஐ தெரியும் அவர் எனது நாத்தனாரின் கணவர் ஆவார். கடந்த 16.07.2017 அன்று மணிகண்டன் மற்றும் மகாலிங்கம் என்ற சிறுவர்கள் எனது வீட்டின் முன்பு விளையாடிக்கொண்டிருந்தார்கள் நான் வெளியே வந்து அந்த பக்கம் போய் விளையாடுங்கள் என்று கூறிவிட்டு வீட்டிற்குள் சென்றபோது டமால் என்று சத்தம்கேட்டு வெளியே வந்து பார்த்தபோது மணிகண்டனுக்கு காலில் ரத்தம் வந்து கொண்டிருந்தது, மகாலிங்கத்திற்கு கையில் ரத்தம் வந்துகொண்டிருந்தது என்னவென்று கேட்டபோது அருகில் ஒரு டப்பா வெடித்து கிடந்தது அதை எங்கே எடுத்தார்கள் என்று கேட்டபோது சக்கரத்தாழ்வார் கோவிலில் உள்ள விளக்கு அருகே மேற்படி டப்பா கிடந்ததாகவும் அதனை எடுத்து வந்ததாகவும் அவர்கள் என்னிடம் கூறினார்கள். எனது கணவர் சம்பவ சமயத்தில் வனச்சரக வேட்டை தடுப்பு காவலராக வேலை செய்து வந்ததால் அந்த நேரத்தில்

வனச்சரகத்தில் பணிமுடித்துவிட்டு ஜீப்பில் மற்ற வனச்சரக அலுவலர்களுடன் அந்த இடத்திற்கு வந்தபோது நாங்கள் கத்திக்கொண்டிருந்தோம் அதை பார்த்துவிட்டு மேற்படி மணிகண்டன் மற்றும் மகாலிங்கம் ஆகியோர்களை ஜீப்பில் மருததுவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

மேற்படி ஜீப்பின் பதிவெண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் வனத்துறையில் வேலை செய்து வருவதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் நான் சாட்சியாக சேர்க்கப்பட்டேன் என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்காததால் அது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசாரிடம் நான் வாக்குமூலம் கொடுத்தேனா என்பது பற்றி தற்போது எனக்கு நியாபகமில்லை. நான் வாக்குமூலம் கொடுத்ததாக போலீசார் எதுவும் தாக்கல் செய்திருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.84/2018

**Depositions of PW- 5**

| Name | திருமதி.காளியம்மாள் | Occupation | |
|---|---|---|---|
| Husband name | குமார் | Calling | |
| Village | செண்பகத்தோப்பு | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of March 2026.

<u>24.03.2026</u>

**எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது செண்பகத்தோப்பில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அசா.1 ஐ எனக்கு தெரியும். கடந்த 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது பேரன்களான மணிகண்டன் மற்றும் மகாலிங்கம் ஆகியோர் சக்கரத்தாழ்வார் கோவிலருகே கிடந்த சிவப்பு கலர் டப்பாவை எடுத்து வந்து செண்பகத்தோப்பில் எங்கள் வீட்டருகே வைத்து தட்டியுள்ளனர் அது வெடித்துவிட்டது. அதில் மகாலிங்கத்திற்கு இடது கையிலும் மணிகன்டனுக்கு இடது காலிலும் காயம் ஏற்பட்டது. உடனே முத்தையா வண்டியை அழைதது வந்து நானும் செல்வியும் பாண்டியனும் மகாலிங்கத்தையும் மணிகண்டனையும் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்து சேர்த்தோம். பின்னர் மகாலிங்கத்தை மட்டும் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மணிகண்டன் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துமவமனையிலேயே சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெறாமல் நீதிமன்றத்தில் நான் கொடுத்ததாக வாக்குமூலம் தாக்கல் செய்திருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் போலீசாரிடம் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.84/2018

**Depositions of PW- 6**

| | | | |
|---|---|---|---|
| Name | **திருமதி.செல்வி** | Occupation | கூலி வேலை |
| Husband name | சின்னமுத்தையா | Calling | |
| Village | செண்பகத்தோப்பு | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of March 2026.

24.03.2026

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது செண்பகத்தோப்பில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அசா.1 ஐ எனக்கு தெரியும். கடந்த 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 04.00 மணியளவில் வெடி சத்தம்கேட்டு வெளியே வந்து பார்த்தபோது மகாலிங்கம் மற்றும் மணிகண்டனுக்கு ரத்தக்காயம் இருந்தது அவர்களிடம் விசாரித்தபோது ஏதோ டப்பாவை தட்டியதாக தெரிந்து கொண்டோம். அந்த வழியாக வந்த வன அலுவலக வண்டியில் நானும் பெரியமுத்தையா மற்றும் காளியம்மாள் ஆகியோர் மகாலிங்கம் மற்றும் மணிகண்டனை திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். பின்னர் மேற்படி டப்பாவை எங்கு எடுத்தார்கள் என்று கேட்டபோது சக்கரத்தாழ்வார் கோவில் அருகே எடுத்ததாகவும் பொடி டப்பா என்று நினைத்து எடுத்ததாகவும் எங்களிடம் கூறினார்கள். மணிகண்டனுக்கு காலிலும் மகாலிங்கத்திற்கு கையிலும் காயம் ஏற்பட்டிருந்தது. திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் எங்களை விசாரித்தனர். பின்னர் மகாலிங்கத்தை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருததுவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் மீண்டும் திருவில்லிபுத்தூர் அரசு

மருததுவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். அதன் பின்னர் வாசன் தனியார் மருத்துவமனையில் அவரை சிகிச்சைக்காக சேர்த்து சிகிச்சை அளித்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

போலீசார் என்னை சம்பவத்தன்று விசாரித்தார்கள். அதன் பின்னர் என்னை விாசரிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தபோதும் எனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளைத்தான் கூறினேன் அதை தவிர்த்து வேறு சங்கதிகள் எதையும் கூறவில்லை. இவ்வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். ஈசாக்கு எனது அண்ணாச்சி மகன் ஆவார்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.